முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| எஸ்.சி.எண்.11 / 2021 | அ.த.சா. 20 |
| பெயர்: குமரேசன் | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 02.09.2026 |

1872ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

(எதிரி ஆஜர். )

முதல் விசாரணை :-

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட குற்றபிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் கடந்த 17.05.2020ம் தேதி திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 18.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் தினேஷ்குமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது முத்துலாபுரத்தை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மனைவி கற்பகம் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண். 332/2020 பிரிவு 341, 294(பி), 302 இதச பதிவு செய்த வழக்கை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

அன்றையதினமே 19.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான முத்துலாபுரம் வடக்கு தெருவிற்கு சென்று சம்பவ இடத்தில் வைத்து சம்பவ இட சாட்சிகளான ராம்குமார், சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் தெருவிளக்கு மற்றும் எமர்ஜென்சி லைட் மற்றும் ஜீப் முகப்பு விளக்கு வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரித்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.11. மாதிரிவரைபடம் அ.சா.ஆ.12.

சம்பவ இடத்தில் 19.35 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் ரத்தம் பட்ட மண் சிறிதளவும், ரத்தம் படாத மண் சிறிதளவை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ-13. ரத்தம் பட்ட மண் சிறிதளவும சா.பொ.5 மற்றும் ரத்தம் படாத மண் சா.பொ.6. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் கற்பகம், அழகர்சாமி, அலெக்ஸ், வினோத், விஜயகுமார், ராமர், சந்தனம்மாள் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழககின் எதிரி சங்கிலியை போலீஸ் பார்ட்டியுடன் தேடிவந்த நிலையில் 17.05.2020 அன்று 20.10 மணிக்கு வத்தலக்குண்டு - திண்டுக்கல் ரோட்டில் அ பிரிவில் நின்றிருந்த எதிரி சங்கிலியை கைது செய்தும் சாட்சிகள் ராஜேஸ்கண்ணன், அழகுமலை முன்னிலையில் அவரை விசாரிக்க எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச்சென்றால் தனது வீட்டை அடையாளம் காட்டியும் தான் சம்பவத்தின்போது எதிரியை குத்த பயன்படுத்திய கத்தியை ஒழித்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அதனடிப்படையில் எதிரியை 21.20 மணிக்கு எதிரியை அவருடைய வீட்டுக்கு அழைத்துச்சென்றபோது அவர் வீட்டின் படிக்கட்டின் கீழ் ஒழித்து வைத்திந்த கத்தி ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் எதரி மற்றும் தடயத்துடன் பட்டிவீரன்பட்டி காவல்நிலையம் வந்து எதிரி அணிந்திருந்த இறந்தவரின் ரத்தம் பட்ட புளு, கருப்பு வெள்ளை நிற கோடு போட்ட டீ சர்ட் ஒன்றை கைப்பற்றினேன். பின்பு எதிரி அணிந்திருந்த காக்கி நிறத்தில் கருப்பு நிற கோடு போட்ட டவுசர் ஒன்றையும் எதிரியிடம் இருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினே.

பின்பு கைது செய்த எதிரியையும் கைப்பற்றிய சொத்துக்களையும் தகுந்த வழிக்காவல் மூலமாக நிலக்கோட்டை நீதித்துறை நடுவர் மன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

17.05.2020ம் தேதி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான ராஜேஸ் கண்ணா மற்றும் அழகுமலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.05.2020ம் தேதி வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு காலை 08.00 மணிமுதல் 10.00 மணிவரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா..ஆ.14. பின்னர் இறந்துபோன கிருஷ்ண்மூர்த்தியின் பிரேதத்தை பிரேத சூராய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் காவலர் 1633 திரு.முத்துக்குமார் என்பவர் மூலமாக கொடுத்தேன். பிணக்கூராய்வு முடிந்து உடலை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். அன்றையதினமே 12.45 மணிக்கு காவலர் 16.33 முத்துக்குமார் என்பவர் இறந்துபோனவர் அணிந்திருந்த ரத்தம்பட்ட டவுசர்ஜட்டி ஒன்றை ஆஜர்படுத்தினார். அதை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அன்றையதினமே சாட்சிகள் கற்பகம், அழகர்சாமி, அலெக்ஸ், வினோத் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் அன்றையதினமே சாட்சிகள் ராஜபாண்டி, முத்துப்பாண்டி, தமிழரசி, பூபதி, விஜயலட்சுமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.05.2020ம் தேதி இந்த வழக்கு துரித தபால் மூலமாக நீதிமன்றம் சென்ற த.கா.1190 திரு.ராமு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.தினேஷ் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 02.06.2020ம் தேதி இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி பிரேத மருத்துவ பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துவர் அருண்மொழி, அரசு மருத்துவமனை வத்தலக்குண்டு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

15.07.2020 ம் தேதி உடற்கூராய்வுக்கு உடன்பணிபுரிந்த த.கா. 1633 முத்துக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே தேதியன்று இவ்வழக்கின் தடய சொத்துக்களை பகுப்பாய்வு அறிககை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்த பெண் காவலர் 1702 ராஜலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தடயத்தை பகுப்பாய்வுக்கு அனுப்ப நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ-15. பின்னர் பகுப்பாய்வு முடிந்து உயிரியல் அறிக்கை பெறப்பட்டது. அந்த உயிரியல் அறிக்கை அ.சா.ஆ-16. குருதி வடிநீரியியல் அறிக்கை அ.சா.ஆ-17. தடய சொத்துக்களை பகுப்பாய்வு செய்து சான்று வழஙகிய மதுரை வட்டார தடய அறிவியல் அலுவலர் திரு.நவநீதகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 03.08.2020 அன்று இந்த வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரி சங்கிலி என்பவர் மீது பிரிவு 341, 294(பி), 302 இதச ஆக இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

புலன்விசாரணையின்போது அ.சா.9, அ.சா.14 முதல் அ.சா.17, ஆகியோர்கள் எதிரியையும் வழக்கு சம்பவத்தையும் இணைத்து வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

இவ்வழக்கு புகாரை எழுதியது யார் என்று என் புலன்விசாரணையில் துலங்கவில்லை. புகாரை அ.சா.1 கைப்பட எழுதவில்லைஎன்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் உள்ளது அவருடைய கையெழுத்து. புகாரை எங்கு வைத்து எழுதப்பட்டது என்று என் புலன்விசாரணையில் துலங்கவில்லை. புகாரில் 17.05.2020ம் தேதி மதியம் சுமார் 02.30 மணியளவில் ஊர் சாவடி அருகில் முதலில் அழகர்சாமியுடன் சண்டை நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சாதாரண வாய் சண்டைதான் என்றும் பெரிய சண்டை கிடையாது என்றால் சரிதான்.

எதிரி வீட்டுக்கும் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி வீட்டுக்கும் இடையே எவ்வளவு தூரம்இருக்கும் என்றால் பக்கத்து தெருவில் உள்ளது. ஒரே தெருவில் அவர்கள் வீடு இல்லை. எதிரியின் வீட்டின் முன்பு வழக்கு சம்பவம் நடந்தாக துலங்கியது. புகார்தாரர் மற்றும் சம்பவ சாட்சிகள் ஒரே ஊரைச்சேர்ந்த உறவினர்கள் என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் கண்ட 4 முதல் 11 வரையுள்ள சாட்சிகள் கண்ணுற்ற சாட்சிகள் என்று முதல்தகவல் அறிக்கையில் கூறப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ தோதிக்கு முன்பு எதிரிக்கும் இறந்துபோனவருக்கும் இடையே முன்விரோதம் இருப்பதாக தெரியவில்லை. மதியம் 02.30 மணியளவில் ஊர் சாவடி அருகே சண்டை நடந்த பிறகு எதிரி வீட்டுக்குபோய்விட்டார் என்றால் சரிதான். அ.சா.1ன் குடும்பத்தினர் எதிரியின் வீட்டுக்கு சென்று அதன்பிறகு சண்டை போட்டார்கள் என்றால் நியாயம் கேட்கப்போனார்கள். அப்போது ஊரில்உள்ள பொது மனிதர்களை அழைத்துச்செல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் சென்றபோது எதிரி வீட்டிற்குள் இருந்தார் என்றும், அ.சா.1ன் குடும்பத்தினர் தான் சண்டை போட்டு அவரை வெளியே வரவழைத்தார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1ன் குடும்பத்தினர் எதிரியுடன் தகராறு செய்தபோது அவர்கள் கொண்டு வந்த ஆயுதம்தான் தவறுதலாக கிருஷ்ணமூர்த்தியின்மீது பட்டு கிருஷ்ண மூர்த்திக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகார்கொடுப்பதில் மூன்று மணிநேரம் காலதாமதம் உள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கான காரணம் பற்றி புகாரில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல.

புகாரில் சம்பவம் 17.05.2020ம் தேதி மதியம் 03.15 என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தானாக மறுவாக்குமூலத்தில் 02.45 என்று சொன்னதாக கூறுகிறார். கிருஷ்ணமூர்த்தியை மருத்துவமனைக்கு 3.00 மணிக்கு அழைத்துசசென்றதாக துலங்கியது.

கிருஷ்ணமூர்த்திக்கு வேறு வகையில் வேறு இடத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்து தவறுதலாக கொடுக்கப்பட்ட புகாரின்பேரில் சரியாக நான் புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. மறுவாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்னர் சாட்சிகளுக்கு நான் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை ஒருநாள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புலன்விசாரணையின்போது இறந்துபோனவரின் உடலில் ஒரு குத்துக்காயமும் ஒரு கீரல் காயமும் இருந்ததாக துலங்கியது. எதிரி வீட்டின் அருகில் இருப்பவர்களை பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபட சாட்சிகளாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு சாதகமாக இருப்பார்கள் என்று விசாரிக்கவில்லை. நான் கூறுவதுபோன்று சொன்ன இடத்தில் சம்பவம் நடந்திருந்தால் அருகில் உள்ள சாட்சிகளை விசாரித்திருப்பேன் என்றும், அவ்வாறு நடக்காததால்தான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.8 சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை. பிரேத கூராய்வு செய்த மருத்துவர் என் விசாரணையின்போது வெட்டுக்காயம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 5 ஆவது விலா எலும்பில் எலும்பு முறிவு காணப்பட்டதாக அவரது விசாரணையின்போது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரி சம்பவத்தின்போது பயன்படுத்திய கத்தியின் நீளம் மரக்கைபிடி 11 செ.மீ, பூண் 0.7 செ.மீ. இரும்பு பாகம் 22 செ.மீ. மொத்த நீளம் 33.7 செ.மீ ஆகும். நான் கூறும் அளவில் எதிரி ஆயுதம் எதையும் பயன்படுத்த வில்லை என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையின்போது எதிரி இரண்டு தடவை குத்தியதாக அ.சா.1 சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சாட்சிகளை முதல் விசாரணையில் சொன்னதுபோல் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. என் விசாரணையின்போது எதிரி கத்தியுடன் ஓடிவிட்டதாக அ.சா.1 கற்பகம் சொல்லவில்லை என்றால் கத்தியுடன் வீட்டுக்குள் ஓடிவிட்டு பின்னர் வெளியே ஓடிவிட்டதாக சொல்லியுள்ளார். முதல் விசாரணையில் சொன்துபோல் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் எதிரி வழகது சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணயில் சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில், விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் நான் வழககின் தடயம் எதுவும் மகஜரில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும உறவினர்கள் என்றும் அவர்களை நான் சரியாக விசாரணை செய்யாமல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மதியம் முதலில் நடந்த சாதாரண சண்டைக்கு இருதரப்பிலும் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். தவறுதலாக எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.09.02 18:56:21 +0530

மறுவிசாரணை - இல்லை

Principal District Judge,

Dindigul.